ஓம்
சிவமயம்



நங்க டம்பனைப் பெற்றவன் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்அடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே.

# கொழும்பு, கொம்பனித்தெரு
# ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்

# வழிபடுவோர் திருக்கூட்டம்

## அமைப்பும் விதிகளும்

18-5-70

காப்பாளர்

**திரு. பா. யோகசுந்தரம்**
(வழக்கறிஞர்)

## தர்மகர்த்தா சபை

தலைவர்

**N. V. கனகசபை**

உபதலைவர்

**சோ. சிவசம்பு**

கௌரவ காரியதரிசி

**க. தியாகராசா**

கௌரவ தனதிகாரி

**R. N. ரெட்டியார்**

கோவில் நிர்வாக தர்மகர்த்தா

**இ. தங்கேஸ்வரன்**

கோவில் சொத்துரிமை தர்மகர்த்தா

**வி. சரவணமுத்து**

திருக்கூட்ட அங்கத்துவ தர்மகர்த்தா

**A. K. இராஜேந்திரன்**

சட்டப் பிரமாணங்கள்

# கொழும்பு கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் வழிபடுவோர் திருக்கூட்டம்

## பிரமாணங்கள்

### 1. பெயர்.

இத்திருக்கூட்டம் கொழும்பு கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் வழிபடுவோர் திருக்கூட்டம் என்னும் பெயரால் அழைக்கப்படும். இதன் காரியாலயம் 131, கியூ வீதி, கொம்பனித்தெரு கொழும்பு 2 என்னும் முகவரியிலுள்ள கோவில் மண்டபமாகும்.

இத்திருக்கூட்டத்தின் நோக்கங்களாவன :-

### 2. நோக்கங்கள்.

இத்திருக் கூட்டத்தின் நோக்கங்களாவன.

(அ) இக்கோவில் பூசை வழிபாட்டு முறைகளை சிரமம் தவருது சைவ சமய அனுட்டானங்களுக்கமைய செவ்வனே நடத்துவித்தலும்.

(ஆ) கோவில் உபயங்கள் விழாக்கள் ஆகியவற்றை நடத்துவித்தலும்

(இ) கோவிலைப் பரிபாலித்தல் புதுப்பித்தல் கோவிலின் வளர்ச்சிக்காக உழைத்தல் வழிபடுவோர்க்கு வேண்டிய வசதிகளைச் (வழிபடுவதற்குரிய வசதி) செய்து கொடுத்தல் ஆகியனவும்.

(ஈ) குறிப்பாக இக்கோவிலின் வளர்ச்சிக்கும் பொதுவாகச் சைவ சமய வளர்ச்சிக்கும் வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ளுதலும் செயல் புரிதலும் இக்கோவிலின் வளர்ச்சிக்கான இவை போன்ற வேறு கருமங்களில் ஈடுபடுதலும்.

### 3. அங்கத்துவம்.

18 வயதிற்கு மேற்பட்ட சைவ சமயத்தவரான 4-ம் பிரமாணத்தில் காணும் நிபந்தனைகளுக்குள் அடங்கியவரான சைவசமய வழி பாட்டினர்க்கே இத்திருக்கூட்டத்தில் அங்கத்துவம் பெற உரிமையுண்டு.

## 4. அங்கத்தினர்.

அங்கத்தினர் முத்திறத்தினர் ஆவர்.

(1) கௌரவ அங்கத்தினர்.

(2) சீவியகால அங்கத்தினர்.

(3) சாதாரண அங்கத்தினர்.

1. சைவ சமயத்தின் அல்லது இக்கோவிலின் வளர்ச்சிக்கோ முன்னேற்றத்திற்கோ விசேடமாகவும் சிரத்தையோடும் தொண்டாற்றியவர்களுள் அதி விஷேட மதிப்புக்குரியவர் எனக் காணப்படுபவர் மாத்திரம் வழிபடுவோர் திருக்கூட்டத்தில் தர்மகர்த்தா சபையின் சிபார்சின் பெயரில் மகா சபைக் கூட்டத்தில் கௌரவ அங்கத்தவராகத் தெரிவு செய்யலாம்.

2. சீவியகால அங்கத்தினர்:

(அ) ஆயிரம் ரூபா பணமாகவோ அல்லது பொருளாகவோ ஒரே முறையில் கோவிலுக்குக் காணிக்கையாய் அளிப்பவரை சீவியகால அங்கத்தவராகத் தெரிவு செய்யலாம். இரண்டாயிரமும் அதற்கு மேற்பட்ட தொகையையும் பணமாகவோ, பொருளாகவோ, ஒரே முறையில் காணிக்கையாக அளிப்பவரையும் அவரது மனைவியையும் சீவியகால அங்கத்தினராகத் தெரிவு செய்யலாம்.

(ஆ) மாதாந்த திருவிழா ஒவ்வொரு மாதமும் வருடாந்தத் திருவிழா (ஸ்கந்த சஷ்டி) உபயங்களும் நட்சத்திரப் பூசை உபயங்களும் ஐந்து வருடங்களுக்கு மேற்பட தொடர்பாக நடாத்தி வருபவர்களையும் சீவியகால அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யலாம்.

3. சாதாரண அங்கத்தவர்கள்.

கீழ்க்காணும் தகைமைகளில் ஒன்றுவது உடையவரை சாதாரண அங்கத்தவராகத் தெரிவு செய்யலாம்.

(அ) வருடாந்தமோ அல்லது மாதாந்தமோ ஒழுங்காக கோவிலுடன் சம்பந்தப்பட்ட ஏனைய திருவிழாக்களையும் உபயமாக நடத்துவோர் அல்லது.

(ஆ) மாதம் 1/- ரூபாவிற்குக் குறையாமலும் பன்னிரண்டு மாதங்களுக்குத் தொடர்ந்து ஒழுங்காகக் கோவிலுக்கு மகிமைப் பணம் செலுத்தி வந்திருப்போர்.

குறிப்பு:— மேற்படி குறிக்கப்பட்ட உபயகாரர் நன்கொடையாளர் 18 வயதிற்குட்பட்டவராயின் அவரின் பெற்றோரில் ஒருவரை அங்கத்தவராகத் தெரிவு செய்யலாகும்.

## 5. அங்கத்துவ உரிமையை நீக்கலும் பின் சேர்த்தலும்.

(அ) ல் கூறியவாறு தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர் எவரும் தமது திருவிழாக்கள் பூசை உபயங்கள் அல்லது மகிமைப் பணம் செலுத்துதல் ஆகியனவற்றை ஒரு வருடத்திற்கு முன் செய்யாது விடின் அவர் இத்திருக்கூட்டத்தின் அங்கத்துவ உரிமை சகலதையும் இழப்பார். ஆனுல் அவர் மறுபடியும் தொடர்ந்து மூன்று வருடத்திற்குக் குறையாத காலத்துக்கு திருவிழாக்கள் பூசை உபயங்கள் அல்லது மகிமைப் பணம் செலுத்தி வந்தால் தர்மகர்த்தா சபை அங்கீகாரத்துடன் அங்கத்தவராகச் சேர்க்கப்படலாம்.

## 6. அங்கத்தவர் உரிமையை குறித்த காலத்திற்கு நீக்கல்.

அங்கத்தவர் எவருடைய செயலாயினும் இத்திருக் கூட்டத்தின் அபிவிருத்திக்கு அல்லது கோவிலின் வளர்ச்சிக்கு இடையூறுள்ளதாக தர்மகர்த்தா சபையினுல் காணப்படின் வழிபடுவோர் திருக்கூட்ட அனுசரணையுடன் அவ் அங்கத்தவருடைய உரிமையை ஒரு குறித்த காலத்துக்கு நீக்கி வைக்க தர்மகர்த்தா சபைக்கு உரிமையுண்டு. இதை மாற்றும் அதிகாரம் மகா சபைக்குண்டு. தர்மகர்த்தா சபையாலோ, மகா சபையாலோ தீர்மானிக்கப்படும் இத்தகைய விஷயம் எதுவும் முறைப்படி உரிய கால அறிவித்தல் கொடுத்துக் கொண்டு வரப்பட்டதாகவும் கூட்டங்களில் சமூகமளிக்கும் அங்கத்தினர் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத தொகையினர், சார்பாக வாக்குக் கொடுத்துத் தீர்மானிக்கப்பட்டதாயிருத்தல் வேண்டும்.

## 7. அங்கத்தவர் பதிவேடு (இடாப்பு)

திருக்கூட்டத்துக்கு அங்கத்தவர்களை முறையாகத் தெரிவு செய்தும் அங்கத்தவர்களின் பெயர்களை முறையாகப் பதிந்தும் அங்கத்தினர் பதிவேட்டினைத் தயாரித்து வைக்க வேண்டியது தர்மகர்த்தா சபையின் பொறுப்பாகும். குறைந்தது ஒருநாள் முன்னறிவித்தலுடன் அங்கத்தினர் பதிவேட்டை அங்கத்தவர் யாராவது பார்க்க விரும்பின் அவர்களுக்குப் பதிவேட்டை அல்லது அதன் பிரதியைக் காட்டவேண்டியது தர்ம கர்த்தாசபையின் கடமையாகும்.

## 8. கூட்டங்கள்

இச் சபையின் கூட்டங்கள்

(அ) சாதாரண கூட்டம்.

(ஆ) வருடாந்தப் பொதுக் கூட்டம்.

(இ) விசேட பொதுக் கூட்டம்.

(ஈ) மகாசபைக் கூட்டம் என நான்கு வகைப்படும்.

(உ) மேற்படி கூட்டங்கள் யாவையும் தர்மகர்த்தா சபை விரும்பிய இடங்களில் கூட்டலாம்.

(அ) இது தர்ம கர்த்தா சபைக் கூட்டம்.
2. ஆலோசனைக்குழுக் கூட்டம் என இருவகைப்படும்.

(1) தர்மகர்த்தா சபைக் கூட்டம்.
கௌரவ காரியதரிசி அவர்கள் ஒரு மாதத்திற்கு ஒருமுறையேனும் அல்லது அவசியமெனத் தனக்குத் தோன்றும் காலத்திலும் அல்லது தர்மகர்த்தா சபையினரில் நால்வர் எழுத்து மூலமாகக் கேட்டுக் கொள்வதின்பேரிலும் தர்மகர்த்தா சபையைக் கூட்டலாம்.

(2) மூன்று மாதத்திற்கு ஒரு தடவை தர்மகர்த்தா சபையும் ஆலோசனைச் சபையும் இணைந்த கூட்டம் நடைபெற வேண்டும். அக் கூட்டத்தில் அம் மூன்று மாதங்களில் ஏற்பட்ட வரவு செலவுக் கணக்குகளைச் சமர்ப்பித்தல், வேறு முக்கிய விடயங்கள் பற்றி ஆராய்தல்.

(3) மேற்கூறியபடி கௌரவ காரியதரிசி தர்மகர்த்தா சபையைக் கூட்டத் தவறினால் சபைத்தலைவர் அச் சபையைக் கூட்டலாம்.

(4) தர்மகர்த்தா சபைக் கூட்டங்களில் குறைந்தது நால்வர் சமூகமளித்தல் வேண்டும்.

(2) ஆலோசனைக்குழுக் கூட்டம்.

1. கௌரவ காரியதரிசி ஒரு மாதத்திற்கு ஒரு முறையேனும் அல்லது அவசிய மெனத் தனக்குத் தோன்றும் காலத்திலும் அல்லது ஆலோசனைச் சபை அங்கத்தினர் எண்மர் எழுத்து மூலமாகக் கேட்டுக் கொள்வதின் பேரிலும் ஆலோசனைச் சபையைக் கூட்ட வேண்டும்.

2. மேற் கூறிய பிரகாரம் கௌரவ காரியதரிசி ஆலோசனைச் சபையைக் கூட்டத் தவறினால் தலைவர் அச்சபையைக் கூட்டலாம்.

3. இக் கூட்டங்களில் தர்மகர்த்தா சபை அங்கத்தினர் இருவர் உட்பட எண்மர் சமூகமளித்தல் வேண்டும். (கோறம்)

(ஆ) வருடாந்த பொதுக் கூட்டம்.

(அ) வருடம் தோறும் வைகாசி மாதத்தில் கௌரவ காரியதரிசி தாமாகவோ அல்லது தர்மகர்த்தா சபைத் தலைவரின் வேண்டுகோளின்படியோ கீழ்க் கூறப்படும் கருமங்களை நிறைவேற்றத் திருக்கூட்டத்தினரின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தைக் கூட்டலாம்.

(ஆ) வருடாந்த பொதுக்கூட்டம் சம்பந்தமாக அறிவித்தலை குறைந்தது பதினைஞ்சு நாட்களுக்கு முன்னர் தமிழ்த் தினசரிப் பத்திரிகைகள் மூலமும் துண்டுப் பிரசுரங்கள் மூலமும் விளம்பரம் செய்

தல் வேண்டும். இக்கூட்டங்களுக்கு ஐம்பத்தொரு அங்கத்தவர்களுக்குக் குறையாத தொகையினர் சமூகமளித்தல் வேண்டும்.

(கோறம்)

(இ) கௌரவ கணக்குப் பரிசோதகரால் பரிசோதிக்கப்பட்ட டிசம்பர் மாதம் 31-ம் திகதி முடியவுள்ள வருடத்திய வருடாந்தக் கணக்கையும் சபையின் அறிக்கைப் பத்திரத்தையும் ஏற்றல்.

(ஈ) முறைப்படி கொண்டுவரும் இதர விடயங்களை ஆலோசித்தல்.

(உ) வருடாந்தப் பொதுக் கூட்டம் விசேஷ பொதுக் கூட்டம் மகா சபைக் கூட்டம் ஆகியவற்றில் விவாதிக்கப்பட வேண்டிய பிரேரணைகள் அக் கூட்டத்திற்கு குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்னர் முறைப்படி கௌரவ காரியதரிசியிடம் சேரவேண்டும்.

(இ) **விசேட பொதுக் கூட்டம்.**

தர்மகர்த்தா சபை அல்லது ஆலோசனைச் சபையின் வேண்டுகோளின் படியும் அல்லது பெயர் விலாசத்துடன் ஐம்பத்தொன்றுக்கு குறையாத அங்கத்தினர் தாம் கூட்டத்தில் கொண்டுவரும் பிரேரணைகளையும் பிரேரிப்பவரின் அல்லது பிரேரிப்பவர்களின் பெயரையும் காட்டி விண்ணப்பிக்கும் எழுத்து மூலம் வேண்டுகோளின்படியும் கௌரவ காரியதரிசி விசேடபொதுக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும். பின் கூட்டம் கூறப்பட்ட நிலைமையினை விண்ணப்பம் கிடைத்த 14 நாட்களுக்குள் கூட்டப்பட வேண்டும். கௌரவ காரியதரிசி அப்படிச் செய்யத்தவறினுல் சபைத்தலைவர் கூட்டத்தைக் கூட்டலாம். இக்கூட்டங்கள் நடத்துவதற்கு ஐம்பத்தொரு அங்கத்தவர்களுக்குக் குறையாத தொகையினர் சமூகமளிக்க வேண்டும். (கோறம்)

(ஈ) **மகாசபைக் கூட்டம்.**

(அ) இம்மகாசபைக் கூட்டத்தை ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் வைகாசி மாதத்தில் கௌரவ காரியதரிசி தாமாகவோ அல்லது தர்மகர்த்தா சபைத் தலைவரின் வேண்டுகோளின்படியோ அல்லது தர்மகர்த்தா சபை, ஆலோசனைச் சபைகளின் வேண்டுகோளின் படியோ அல்லது ஐம்பத்தொரு அங்கத்தவர்களுக்குக் குறையாத தொகையினர் கைச்சாத்திட்டு எழுத்து மூலம் வேண்டிக் கொள்வதின் பேரிலோ, கீழ்க்காணும் கருமங்களை நிறைவேற்றுவதற்காக கூட்டவேண்டும். கௌரவ காரியதரிசி அவ்விதம் கூட்டத் தவறினுல் மகாசபைத் தலைவர் மகாசபைக் கூட்டத்தைக் கூட்டவேண்டும்.

(ஆ) மகா சபைக் கூட்டம் கூட்டுவதற்கு பிரமாணம் 8. ஆ (ஆ) இல் காணும் நிபந்தனைகளை கைக் கொள்ளல் வேண்டும்.

(இ) பிரமாணம் 8. (இ) (ஈ) இல் குறிப்பிடப்பட்ட கருமங்களை நிறைவேற்றல்.

## 9. அலுவலாளர்கள் தேர்வு.

**(1) தர்மகர்த்தா சபை அலுவலாளர்கள்.**

தலைவர், ஒரு உபதலைவர், ஒரு கௌரவ காரியதரிசி, ஒரு பொருளாளர், ஒரு கோவில் நிர்வாக தர்மகர்த்தா, ஒரு கோவில் சொத்துரிமை தர்மகர்த்தா, ஒரு கோவில் வழிபாட்டுத் திருக்கூட்டத்தின் அங்கத்துவ தர்மகர்த்தா ஆகிய எழுவரைக் கொண்ட குழு வொன்றைத் தெரிவு செய்தல். இக்குழு தர்மகர்த்தா சபைஎன அழைக்கப்படும்.

**(2) ஆலோசனைச் சபை.**

பரந்த அடிப்படையில் பதினைந்து அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு குழுவைத் தெரிவு செய்தல் இக்குழு ஆலோசனைச் சபைஎன அழைக்கப்படும்.

**(3) கணக்குப் பரிசோதகர்கள்.**

(அ) உள்த்துறைக் கணக்குப் பரிசோதகர்கள் இருவர்.

(ஆ) பகிரங்க கணக்குப் பரிசோதகர் ஒருவர்.

## 10. ஆலோசனைச் சபையின் கடமைகள்.

(அ) கோவில் நிர்வாகங்களைப் பற்றியும் கோவில் பொது விடயங்களைப் பற்றியும், திருவிழாக்கள் நடாத்துவது பற்றியும் தர்மகர்த்தா சபையாருக்கு ஆலோசனை கூறுதல்.

(ஆ) கட்டிடங்களை மாற்றியமைத்தல், புதிய கட்டிடங்களை நிர்மாணித்தல், வேறு திருப்பணி வேலைகளைச் செய்தல் போன்ற கருமங்களில் தர்மகர்த்தா சபைக்கு ஆலோசனை கூறுதல்.

(இ) நிதி சம்பந்தமான சகல விடயங்களிலும் தர்மகர்த்தா சபைக்கு ஆலோசனை கூறுதல்.

## 11. தர்மகர்த்தா சபையின் கடமைகள்.

(அ) திருக்கோவிலையும் கோவிலைச் சேர்ந்த ஆதனங்களையும் பாதுகாத்தல் பரிபாலித்தல் நல் நிலையில் வைத்து இருத்தல்.

(ஆ) நித்திய பூசைகள் விசேட பூசைகள் விழாக்கள் நடாத்துவித்தல்.

(இ) கோவில் பணியாளர்களை நியமித்தல், நீக்கல் அவர்களின் நியமன நிபந்தனைகளை வகுத்தல், பணியாளர்களின் வேதனங்களை நிர்ணயித்தல்.

(ஈ) பணியாளர்களின் குற்றச்சாட்டுகளை விசாரித்தல், ஏற்ற நடவடிக் கைகளை மேற்கொள்ளல்.

(உ) கோவிலுக்கு உபகரிக்கப்படும் பணம் சொத்து மற்றும் பொருட் களாகிய நன்கொடைகளை ஏற்றல், கோவிலுக்குரிய வருமதிகளை அறவிடுதல், செலவு செய்தல், அவற்றைப் பாதுகாத்தல், பேணுதல்.

(ஊ) கோவிலுக்குரிய நிதியை கோவில் பேரில் ஒரு வங்கியிலோ அல்லது பல வங்கிகளிலோ போட்டு வைத்தல்.

(எ) கட்டிடங்களை மாற்றியமைத்தல் புதிய கட்டிடங்களை நிர்மாணித்தல் போன்ற திருப்பணி வேலைகளை, ஆலோசனைச் சபையுடனும் கலந் தாலோசித்து நிறைவேற்றல்.

(ஏ) அர்ச்சனை, பூசை, திருவிழா, உபயங்கள் மற்றும், சமயாசாரக் கிரி யைகள் ஆகியவற்றிற்குரிய கட்டணங்களை ஆலோசனைச் சபையுட னும், கலந்தாலோசித்து, நிறைவேற்றல்.

(ஐ) நீதிமன்றங்களில் கோயிலோடு சம்பந்தப்பட்ட, உரித்துகள், சோந் தைகள், பொறுப்புகள் சம்பந்தமான வழக்குகள் இருந்தால் அம் மன்றங்களில் வழக்குகள் சம்பந்தமான, சகல நடவடிக்கைகளிலும் ஈடுபடுதல். இங்கே குறிப்பிடப்பட்ட உரிமைகள் அதிகாரங்களைத் தவிர மேலும் அவசியமெனக் கருதும் விடயங்களில் கருமமாற்றுதல்.

(ஒ) நீதிமன்ற உத்தரவுடன் திருக்கூட்டத்தின் விசேஷ பொதுக் கூட்டத் தில் அல்லது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் அல்லது மகாசபைக் கூட்டத்தில் சமூகமளிக்கும் அங்கத்தவர்களின் மூன்றில் இரண்டு பங்கினரின் வாக்குரிமையை பெற்றாலேயன்றி அசைவற்ற கோவில் ஆதனங்களைப் பராதீனப்படுத்த தர்மகர்த்தா சபையினருக்கு அதி காரமில்லை.

(ஓ) தர்மகர்த்தா சபைக்கும், ஆலோசனைச் சபைக்கும் ஒருமைப்பாடு காணு விடயங்கள் எதையும் தர்மகர்த்தா சபை நிறைவேற்ற விரும் பினால் விசேட பொதுக் கூட்டத்தைக்கூட்டி அதன் அங்கீகாரத்தைப் பெற்ற பின்பே செயல்பட வேண்டும்.

## 12. ஒரு தர்மகர்த்தாவின் இடம் காலியாகும்போது

தர்மகர்த்தா சபையார் அந்த இடத்திற்கு ஒருவரை நியமிக்கலாம். அத்தகைய நியமனம் அடுத்துவரும் வருடாந்தப் பொதுக்கூட்டத்தின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும். ஆனால் ஏக காலத்தில் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட இடங்கள் காலியாகும்பொழுது அந்த இடங்களுக்கு திருக்கூட்டத்தினர் வருடாந்த அல்லது விசேட பொதுக் கூட்டத்தி லன்றி வேறு நியமனம் செய்யக்கூடாது. அவ்வாறு நியமனம் பெறும்

தர்மகர்த்தாக்களுக்கும் அடுத்துவரும் மகாசபைக் கூட்டம் வரையுமே கடமை புரிவர்

## 13 தர்மகர்த்தா சபையினரின் உரிமையும் அதிகாரமும்

தர்மகர்த்தா சபையார் ஒவ்வொருவரும் கோவில் தர்மகர்த்தா எனப்படுவர். ஒவ்வொருவருக்கும் தர்மகர்த்தா சபையின் பொறுப்பும் உரிமையும் அதிகாரமும் உண்டு.

## 14. தர்மகர்த்தாக்களின் சேவைக் காலம்

தர்மகர்த்தாக்கள் தங்களுடைய சேவைக் காலமாகிய ஐந்தாண்டு முடிவில் தொடர்ந்துவரும் புதிய தர்மகர்த்தா சபையினரைத் தெரிவித்து அவர்களிடம் சகலவற்றையும் ஒழுங்காக ஒப்புவித்து பதவி நீங்குவது அவர்களின் கடமையாகும்.

## 15. தர்மகர்த்தா சபை அலுவலாளர் கடமைகள்

### (1) தலைவரின் கடமைகள்

(அ) கொழும்பு கொம்பனித்தெரு, ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் வழிபடுவோர் திருக்கூட்டத்தினரின் கூட்டங்களில் தலைமை வகித்தலும் அச்சபையின் பணிகளை நடாத்தி வருவதும் கோவில் பரிபாலனத்தைச் சிறப்பாக நடாத்தி வருவதும் தர்மகர்த்தா சபை யின் கூட்டங்களில் தலைமை வகித்து அச்சபையின் பணிகளை நடாத்தி வருவதும் தலைவரின் பொறுப்பும் கடைமையுமாகும்.

(ஆ) தர்மகர்த்தா சபை அலுவலாளர் எவரும் செய்யத் தவறும் கடமைகளை நிறைவேற்றுதல். ஆலோசனைக் குழு கூட்டத்திற்கு தலைமை வகித்தல்.

### (2) உப-தலைவரின் கடமைகள்

(அ) தலைவர் சமூகமளிக்காதபோது அவரின் கடமைகளை நிறை வேற்றுதலும் தலைவரால் நியமிக்கப்படும் பிற கருமங்களை நிறை வேற்றுதலும்.

### (3) கௌரவ காரியதரிசியின் கடமைகள்

(அ) சாதாரண கூட்டங்கள், வருடாந்தப் பொதுக் கூட்டம், விசேட பொதுக் கூட்டம், மகாசபைக் கூட்டம், ஆலோசனைக் குழு கூட்டம் என்பனவற்றை கூட்டுவதோடு அவைகளின் நிகழ்ச்சிகளை ஒரு புத்தகத்தில் எழுதி வைத்தல்.

(ஆ) அங்கத்தவர்களின் நாமாவளியை முறைப்படி எழுதி வைத்தல்.

(இ) சபைக்கு வரும் கடிதங்களை திருக்கூட்டத்தின் ஏற்பாட்டின் படி கையாளுதல்.

(ஈ) திருக்கூட்டத்தினுல் நடத்தப்படும் கூட்டங்களில் செய்யப் படும் தீர்மானங்களை நிறைவேற்றுதல்.

(உ) வேறு எந்த அலுவலாளருக்கும் நியமிக்கப்படாத இவை போன்ற கருமங்களைச் செய்தல்.

(4) பொருளாளரின் கடமைகள் (தனுதிகாரி)

(அ) கோவில் வரவு செலவுக் கணக்குகளையும் கோவிலின் அசை வுள்ள அசைவற்ற ஆதனங்களின் கணக்குகளையும் நேர்மையாகவும் ஒழுங்காகவும் தயாரித்து வைத்திருத்தல்.

(ஆ) திருக்கூட்டத்தின் ஏற்பாட்டின்படி பணம் சேகரித்தலும் செலவிடுதலும் கோவில் ஊழியர்களின் சம்பளங்கள் முதலியன வற்றை வழங்கலும்.

(இ) திருக்கூட்டத்தின் கணக்குகளைச் சபைக் கூட்டங்களில் சமர்ப்பித்தலும் கணக்கு பரிசோதகர்களுக்கு கணக்கு விபரங்களை சமர்ப்பித்தலும்.

(ஈ) திருக்கூட்டத்தின் செலவுக்காக நூற்று ஐம்பது (Rs. 150/-) ரூபாவுக்கு மேற்படாத தொகைப் பணத்தை மாத்திரம் கையிருப் பாக வைத்துக்கொண்டு மிகுதிப் பணத்தைத் தர்மகர்த்தா சபையும் ஆலோசனைச் சபையும் கூட்டாக சேர்ந்து நியமிக்கும் எந்த வங்கி யிலும் கோவிலின் பேரில் போட்டு வைத்தலும் அல்லது இச்சபைகள் குறிக்கும் வேறெவ்விதத்திலும் சேமித்தலும் பொருளாளரின் கடமையாகும். விசேட காரணங்களுக்காக இரு சபைகளினதும் அங்கீகாரத்துடன் நூற்று ஐம்பதுக்கு (Rs. 150/-) மேற்பட்ட தொகையை பொருளாளர் வைத்திருக்கலாம்.

(உ) எந்த அங்கத்தவரும் குறைந்தது ஏழு நாள் அறிவித்தல் கொடுத்தால், கோவிற் கணக்குப் புத்தகங்களை அவருக்குக் காட்ட வேண்டியது பொருளாளரின் கடமையாகும்.

(ஊ) கோவில் உண்டியல் பணத்தை காலத்திற்குக் காலம் சேகரித் தல் வேண்டும் உண்டியல் பெட்டியைப் பொருளாளர் (தனுதிகாரி) தர்மகர்த்தா சபையின் அங்கத்தவர் ஒருவர் அல்லது இருவருடைய முன்னிலையில் திறந்து அவர்களுடன் சேர்ந்து பணத்தை எண்ணி உடனேயே கணக்குப் புத்தகத்தில் பதிந்து சமூகம் அளித்த தர்ம கர்த்தா சபை அங்கத்தவர்களின் கைசாத்தையும் பெறுதல் வேண்டும்.

(எ) கோவிலின் பேரில் கட்டவேண்டிய வரிகள் கட்டணங்கள் யாவற்றிற்கும் உரிய காலத்தில் முறைப்படி பணம் செலுத்திப் பற்றுச்சீட்டுப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

(5) **கோவில் நிர்வாக தர்மகர்த்தாவின் கடமைகள்.**
தினசரி பூசைகள், விசேட பூசைகள், சாதாரண விழாக்கள், விசேட விழாக்கள் ஏனைய சமயாசார விழாக்களை ஒழுங்காகச் செவ்வனே நடாத்துவித்தல் நிர்வாகத் தர்மகர்த்தாவின் கடமையாகும்.

(6) **கோவில் சொத்துரிமை தர்மகர்த்தாவின் கடமைகள்.**

(அ) கோவிலைச் சேர்ந்த அசைவுள்ள அசைவற்ற சொத்துகள் ஆதனங்களைப் பாதுகாத்து, அவற்றின் சகல விபரங்களையும் ஒரு பதிவேட்டில் தயாரித்து வைத்தல். கோவில் சொத்துகள் சம்பந்தமான சகல பத்திரங்கள் உயில்கள் மற்றும் முக்கிய தஸ்தாவேசுகளைப் பாதுகாத்து வைத்திருத்தல் சொத்துரிமை தர்மகர்த்தாவின் கடமையாகும்.

(7) **திருக்கூட்ட அங்கத்துவ தர்மகர்த்தாவின் கடமைகள்.**

(அ) அங்கத்தவர்களைச் சபைக்குச் சேர்ப்பதும்.

(ஆ) திருக்கூட்டத்தின் அங்கத்தவர்களுடைய பதிவேட்டைத் தயாரித்தல் மூன்று மாதங்களுக்கு கொருதடவை தர்மகர்த்தா சபைக்குச் சமர்ப்பித்து அதன் அங்கீகாரத்தைப் பெற ஆவன செய்வதும்.

(இ) நட்சத்திர உபயங்களைச் சேர்ப்பதும் அவர்களின் விபரமடங்கிய பதிவேட்டினைத் தயாரிப்பதும் பிரசுரம் செய்தலும்.

## 16. கணக்குப் பரிசோதகர்கள்.

(அ) உட்துறை கணக்குப் பரிசோதகர்கள் இருவர் திருக்கூட்டத்தின் மகாசபைக் கூட்டத்தில் தெரிவு செய்யப்படவேண்டும் இவர்கள் காலத்திற்குக் காலம் திருக்கூட்டத்தின் வரவு செலவு கணக்குகளை பரிசோதித்தல் கணக்குகளை வைத்திருக்கும் முறையைப் பற்றி ஆலோசனை கூறுதல் பொருளாளர் வருடாந்த வரவு செலவுக் கணக்குகளைத் தாயாரிக்கும் போது அவருக்கு உதவுதல் வேண்டும்.

(ஆ) பகிரங்க கணக்குப் பரிசோதகர்கள் தொகுதி மூன்று 105 ம் அதிகாரத்திலுள்ள சபைக் கூட்டத்தின் 18 ம் பிரிவின் பிரகாரம் மகாசபைக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட வேண்டும் இவர்கள் வருடாந்தம் திருக்கூட்டத்தின் வரவு செலவுக் கணக்குகளை பரிசோதித்து உறுதிப்படுத்துதல் வேண்டும்

## 17. வங்கிக் கணக்கு.

கோவிலின் நிதி ஒரு வங்கியிலோ அல்லது பல வங்கிகளிலோ போட்டு வைக்கப்படல் வேண்டும் தலைவர் பொருளாளர் (தனாதிகாரி) கௌரவ காரியதரிசி ஆகிய மூவரில் இருவர் சேர்ந்து காசோலைகளிற் கையொப்பம் இட்டே வங்கியிற் போடப்பட்ட பணத்தை எடுக்கலாம்.

## 18. கொடுக்கல் வாங்கல் மட்டுப்படுத்தல்.

தர்மகர்த்தா சபை ஆலோசனைச்சபைகளின் அனுமதியை முன்னரே பெற்றுக்கொள்ளாமல் கோவிலின் நிதியிலிருந்து செலவு ஏற்படக்கூடிய எத்தகைய ஒப்பந்தத்தையோ, உடன்படிக்கையையோ எந்தச் செயலாளராவது (கௌரவ காரியதரிசி) அல்லது சபை அங்கத்தவராவது செய்து கொள்ளப்படாது. ஆயினும் அவசிய செலவு ஏதும் ஏற்படும் பட்சத்தில் தலைவரினதும் கௌர காரியதரிசியினதும் ஒருமித்த அனுமதியுடன் ஆயிரம் ரூபாவுக்கு (Rs. 1000/-) மேற்படாத தொகையைச் செலவு செய்யலாம். பின்னர் அச்செலவுக்கு மேற்படி சபைகளின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

## 19. தர்மகர்த்தா சபை ஆலோசனை சபைகளை நீக்கல்

திருக்கூட்டத்தின் இவ்விரு சபைகளையும் நீக்கும் உரிமை மகா சபைக்குண்டு. இது விடயத்தில் ஐம்பத்தொரு பேருக்குக் குறையாத தொகையினர் சமூகமளித்தல் வேண்டும். கூட்டத்திற்கு சமூகமளிப்பவர்களில் மூன்றில் இரண்டு பங்குக்கு குறையாத தொகையினர் சார்பாக வாக்குக் கொடுத்தாலே அது மகா சபையின் தீர்மானமாகும்.

## 20. வருடாந்தக் கணக்கை பதிவு கந்தோருக்கு அனுப்புதல்

பொருளாளர் (தனாதிகாரி) ஒவ்வொருவருடமும் மார்ச் மாதம் 31ம் திகதிக்கு முன்னர் அதற்கு முந்திய டிசம்பர் மாதம் 31ம் திகதி முடியவுள்ள வருடத்திய திருக்கூட்டத்தின் நோக்கங்களுக்கமைந்த வரவு செலவு கணக்குகளையும் நிதியிருப்புகளையும், பலாபலன்களையும் சபையின் அங்கத்தினர் தொகையையுங் கொண்ட பத்திரங்களை பகிரங்க கணக்குப் பரிசோதகராற் பரிசோதிப்பித்து பதிவு கந்தோருக்கு அனுப்ப வேண்டும்.

## 21. பிரமாணங்களைப் பற்றிய சந்தேகம்

திருக்கூட்டத்தில் பிரமாணங்கள் சம்பந்தமாக ஏற்படும் சந்தேகங்கள் எதிலும் வருடாந்த அல்லது விசேட அல்லது மகாசபைக் கூட்டத்தில் மாற்றப்படும்வரை தர்மகர்த்தா சபையின் தீர்மானமே கைக்கொள்ளப்படும்.

## 22. பிரமாண மாற்றம் முதலியன

இச்சபையின் பிரமாணங்களை மாற்ற அல்லது நீக்க அல்லது திருத்த அல்லது புதுப்பிக்க அல்லது புதுப் பிரமாணங்களைச் சேர்க்க அதிகாரம் பொதுக் கூட்டத்திற்கு உண்டு. அவ்வாறு மாற்றப்படும், நீக்கப்படும், திருத்தப்படும், புதுப்பிக்கப்படும் அல்லது சேர்க்கப்படும் பிரமாணங்களைப் பொதுக் கூட்டத்தில் சமூகமாயிருந்து இத் தீர்மானத்தை வெளியிடும் அங்கத்தவருள் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத தொகையினரின் சம்மதம் பெற்றாலே அவை சபையின் அங்கீகாரம் பெற்றவையாகக் கொள்ளப்படும். (Societies Ordinance) 7-ம் பிரிவின் 2 ஆம் உட்பிரிவின் பிரகாரம் திருத்தங்களின் பிரதி கந்தோர் தலைவருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

## 23. வாக்களித்தல்

எந்தக் கட்டத்திலாவது தத்துவப் பத்திரங்கள் மூலமாக வாக்களித்தல் அனுமதிக்கப்படமாட்டாது. சபையின் காரியக் கூட்டம் எதிலும் சமூகமாக இருக்கும் ஒவ்வொரு சாதாரண அங்கத்தவருக்கும் சீவியகால அங்கத்தவருக்கும் ஒரு வாக்குரிமை உண்டு. ஒரு கட்டத்தில் இரு கட்சியிலும் சம தொகையானவர்கள் வாக்குரிமை கொடுத்தால் அக் கூட்டத்தில் தலைவராக இருப்பவருக்கு தனது வாக்குரிமையுடன் பிரத்தியேக மான வாக்குரிமையும் ஒன்று உண்டு.

131, நியூ வீதி,
கொழும்பு-2.

கௌரவ காரியதரிசி
க. தியாகராசா

உள்துறை கணக்குப் பரிசோதகர்கள்:—

திரு. நா. பொன்னையா
திரு. மு. கனகரத்தினம்

பகிரங்க கணக்குப் பரிசோதகர்:—

திரு. சி. நித்தநாயகம்
(சார்ட்டர்ட் அக்கவுன்டன்ட்)

ஆலோசனைக்குழு அங்கத்தவர்கள்:—

திரு. சு. வெள்ளியம்பலம்
திரு. க. ஆறுமுகம்
திரு. S. ஸ்ரீதரன்
திரு. வி. செல்வநாயகம்
திரு. வ. சீவரத்தினம்
திரு. நா. திருநாவுக்கரசு
திரு. வி. நித்தியானந்தன்
திரு. சே. முருகேசு
திரு. கோ. செந்தில் முருகன்
திரு. க. இராசரத்தினம்
திரு. க. கதிர்காமநாதன்
திரு. க. இரத்தினசபாபதி
திரு. கா. குகதாஸ்
திரு. மு. தில்லையம்பலம்
திரு. க. அருட்பிரகாசம்

Amity Printers, Justice Akbar Mawatha, Colombo 2.